19

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 065/ந/2021
நாள். 08.02.2022

The Secretary,
The Planters Association of Tamil Nadu – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வால்பாறை நகராட்சி. – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், A.T.T. காலனி, எண்.42, என்ற முகவரியில் இயங்கி வரும் The Planters Association of Tamil Nadu, செயலாளர், திரு.பிரதீப் சுகுமார் என்பவரின் 05.05.2021 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் 10.05.2021 அன்று பெறப்பட்டு 065/2021 எண்ணிட்ட முறையீட்டு எண்ணாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு, வால்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், A.T.T. காலனி, எண்.42, என்ற முகவரியில் இயங்கி வரும் The Planters Association of Tamil Nadu, செயலாளர், திரு.பிரதீப் சுகுமார் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

The Planters Association of Tamil Nadu (PAT) is a registered association of plantation employers in the State of Tamil Nadu, growing the commodities of Tea, Coffee, Rubber and Spices, primarily situated in the high elevations of the State in the districts of Coimbatore, The Nilgiris, Salem, Dindigul, Theni, Tirunelveli and Kanyakumari. The plantations owned by the following entities are the member estates of the Complainant and situated in the Valparai Taluk of Coimbatore.

M/s. Tata Coffee Ltd.,
M/s. Tea Estates India Ltd.,

M/s. Parry Agro Industries Ltd.,
M/s. Bombay Burmah Trading Corpn., Ltd.,
M/s. The Peria Karamalai Tea and Produce Co., Ltd.,
M/s. Jayshree Tea and Industries Ltd.,
M/s. The Puthutottam Estates (1948) Ltd.,
M/s. Waterfall Estate Pvt., Ltd.,

The abovesaid members are also concurrent members of The Anamallai Planters Association (APA), Valparai, which is the district level association affiliated to the Complainant PAT. These estates owned by the above companies fall within the jurisdication of the Valparai Municipality of Coimbatore District, which consequently is their local body, governed by the provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 ('the Act' for short). Our members employ a total of around 16,000 plantation workers in the area who are resident within the plantations along with their families. Thus, the 'public' in the estate areas are none else than the employees of the estates and their families.

2. The immediate issue leading to this complaint pertains to Section 249 of the Act, which deals with the requirement of obtaining a licence from the Executive Authority, for carrying on any business or commercial activity specified under Schedule V of the Act (generally known as D & O Licence). The members of the Complainant have been remitting the said D& O licence fee due as per the revised rate of fees prescribed vide the Resolution No.826 dated 15.12.2017, passed by the Municipal Council of the Valparai Municipality. The said resolution was also published by the Municipality in newspapers for wide publicity for the benefit of public. There was an unreasonable hike in the D&O licence fees payable as per this resolution, which was opposed by the public. However, the Municipality did not reconsider its decision to hike the D&O licence fee at that point in time. The Act does not prescribe any time frame for revision of D&O licence fees, since it is not a tax, as for instance property tax levied by the local body, which is necessarily subject to periodic revision. However, the general practice in the case of D&O licence fee is no revise it once every 5 years. As such, the next quinquennial revision of the fee was due only towards the end of the year 2022.

3. However, to the shock and dismay of the Complainant and its members, the Municipality effected an out-of-turn revision of the D&O Licence fees again, by publication of the revision of fees in the Coimbatore District Gazette dated 27.11.2020. The revised rate of fees was to take effect from 01.04.2020. Thus, a revision of the fee was effected even before the completion of three years.

4. The members of the Complainant took serious objection to the untimely, irrational and steep revision of the D&O licence fee and sent their detailed written objections to the same, addressed to the Respondent Commissioner of the Municipality. They also took a stand that, they will be paying only the pre-revised fee prescribed

during the year 2017, which itself was under dispute. However, without formally responding to the representations of the Complainant's members, the Respondent has been threatening them unofficially to pay up the D&O licence fees as per the revised rates of the year 2020 or face the consequences.

5. It is submitted that, even as per the impugned District Gazette notification dated 27.11.2020 published by the Respondent, the legal provisions under which the revision is purported to have been effected have been wrongly mentioned. It says that, the revision is pursuant to Section 249 of the Tamil Nadu Public Health Act, 1939. Even if it is taken that the said Section 249 actually refers to the Municipalities Act, the reference to Section 5 therein is of no consequence, since section 5 of the Public Health Act pertains to the constitution of a Public Health Board by the State Government and has nothing to do with D&O licence fee. Even otherwise, the notification itself grandly declares that, a revision in the D&O fees is warranted only once in five years. If so, it is not known as to what is the basis for hurriedly effecting a premature revision within three years and that too with an unprecedented increase. All these obvious gaffes in the notification would go to show that, the Respondent has not applied his mind to any of the vital legal aspects pertaining to the revision of the D&O licence fee under his jurisdiction.

6. a) The Complainant submits that, it may not be out of place to mention that, according to press reports, Mr.K.Pounraj, the Commissioner of the Valparai Municipality under whose watch the impugned District Gazette notification dated 27.12.2020 was issued, has been booked by the District Crime Branch Police, on the charge of cheating and misappropriating public funds to the tune of Rs.15.62 crores and has also been relived from duty.

b) The Complainant may also submit that, its members being plantations governed by The Plantations Labour Act, 1951 are required by law to provide all civic amenities within the plantation, such as provision of roads, sanitation, drinking water supply, street lights etc at their own cost, which would otherwise be the responsibility of the Municipality. But, all local taxes and levies are duly and promptly collected by the Municipality, though no civic benefit is provided to the residents of the Complainants member estates, as in the case of the general public. Even the daily-rated wage earning workers are nor spared by the Municipality and are compelled to pay 'Profession Tax' on their wages, under section 124-D of the Act. This has led to a situation, whereby the Valparai Municipality is one of the richest local bodies in the State, with very little scope for expending public funds. The Municipality is itself situated within the precincts of the 'Anamallai Tiger Reserve' and the primary economic activity within its jurisdiction is the plantation industry, with practically no other activity, except for some essential State Government offices and petty traders. This has resulted in the Municipality treating the plantations as a convenient and captive source of revenue generation, with no obligation to provide any corresponding civic services, which it is

mandated under law. The Plantation industry is already faced with a continuing financial crisis and is unable to put up with the unchecked and whimsical nature of the local body anymore. However, for the purpose of these proceedings, the complainant confines their case only to the question of D&O licence fee revision by the Muncipality.

7. It is submitted that, it is settled legal position that a 'fee' is different from a 'tax' collected by a statutory authority. While a proportionate 'quid pro quo' cannot be expected to be delivered to the citizen to the extent of tax collected, a fee is necessarily required to have a rational nexus to the cost of 'service' rendered, for which the collection of the fee is warranted. Therefore, the Respondent is duty bound to establish and demonstrate the rationale behind the premature revision of the D&O licence fee and the basis on which such an irrational hike was effected.

8. It is also submitted that, in the absence of a duly elected municipal council functioning in the Municipality, the Complainant is left with no appeal remedy against the unilateral actions of the Respondent, who acts as both the judge and prosecutor for his own cause. The Complainant humbly submits that, such unwarranted actions of the Respondent in the exercise of his powers on behalf of an absentee municipal council amounts to 'maladministration' as envisaged under section 2(8) of The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, which warrants the interference of this Hon'ble authority in this matter.

9. It is therefore prayed that, this Hon'ble Ombudsman Authority may be pleased to

i) issue an interim direction to the Respondent not to demand from the Petitioner's members, payment of D&O licence fee revised during the 2020, during the pendency of the enquiry on this complaint.

ii) to declare that, the Respondent's notification under Na Ka No.593/2003/H-1, dated 07.09.2020, as published in the Coimbatore District Gazette dated 27.11.2020, is not in accordance with law and it cannot be enforced against the members of the Complainant, for the reason of serious irregularities involved in the same, resulting in maladministration and thus render justice.

2. வால்பாறை நகராட்சி ஆணையாளர் திரு.சு.சு.சுரேஷ்குமார் என்பவர் தனது 3.12.2021 நாளிட்ட கடித்தின் மூலம் பின்வரும் அறிக்கையை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்:-

"தமிழ்நாடு அரசு விதிகளின்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே தொழில் உரிமம் (D&O Licence) உயர்வு செய்யப்பட வேண்டும் எனவும் வால்பாறை நகராட்சியில் நகர் மன்ற தீர்மான எண்.826 நாள்.15.12.2017 ல் உயர்வு செய்து விட்டு மீண்டும் 01.04.2020–ல் உயர்வு செய்ய அரசு கெஜட்டில் 27.11.2020 அன்று பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரி உயர்வு செய்யாமல்

முன்னதாகவே வரி உயர்வு செய்யப்பட்டதாகவும் மனுவில் புகார் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சியிலிருந்து 11.06.2004 அன்று தரம் உயர்த்தப்பட்ட வால்பாறை நகராட்சியில் 11.06.2004 முதல் 31.03.2020 வரையான சுமார் 16 வருடங்கள் தொழில் உரிமக் கட்டணம் (D&O Licence) ஏதும் உயர்வு செய்யப்படவில்லை. 16 வருடங்களுக்கு பின்னரே வால்பாறை நகரட்சி மன்ற தீர்மான எண்.141 நாள்.30.04.2020 ல் 01.04.2020 முதல் தொழில் உரிமக் கட்டணம் உயர்வு செய்யப்பட்டது''.

15.12.2017ல் வரி உயர்வு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட தீர்மானம் எண்.826 உள்ளாட்சி தேர்தல் வார்டு மறுவரையறை சம்மந்தமான தீர்மானமாகும். தவறாக தகவலை மனுதாரர் தெரிவித்துள்ளார்.

தொழில் உரிம கட்டணம் (D&O Licence) அரசு மற்றும் நகராட்சி சட்டவிதிகளின் படி 5 ஆண்டுகளுக்கு பின்னரே உயர்வு செய்யப்பட்டுள்ளதால் இதில் விதிமீறல் ஏதுமில்லை தவறான தகவலை சுட்டிக்காட்டி 01.04.2020 முதல் உயர்வு கட்டணத்தினை ரத்து செய்ய கோரியுள்ளதை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

3. இம்முறைமன்றத்தின் 07.12.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் The Planters Association of Tamil Nadu, செயலாளர், திரு.பிரதீப் சுகுமார் என்பவர் அழைக்கப்பட்டு, அவர் 09.12.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

''வால்பாறை நகராட்சியில் உள்ள தேயிலை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களிடம் அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிம கட்டணம் (Danugeros and Offensive Trade License Fees) கடந்த 2017ம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இவ்வுயர்வு தொடர்பாக, பலமுறை நகராட்சியில் புகார் மனு அளித்தும், நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இருந்தாலும், 2017 ல் நகராட்சியால் விதிக்கப்பட்ட கட்டணத்தை எங்களது ஆட்சேபனைகளுக்கு குந்தகமின்றி கட்டிவந்த நிலையில், மீண்டும் 2020 ஆம் ஆண்டு பல மடங்கு உயர்வுடன் மேற்கண்ட கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இக்கட்டண உயர்வு சட்டத்திற்கு புறம்பானதாகும். எனவே, தேயிலை தொழிலுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 2020ம் ஆண்டு உயர்த்தப்பட்ட கட்டண உயர்வை உடன் ரத்து செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

4. இம்முறைமன்றத்தின் 07.12.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் வால்பாறை நகராட்சி ஆணையாளர் திரு. சுரேஷ்குமார் அவர்கள் அழைக்கப்பட்டு, அவர் 14.12.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

''வால்பாறை நகராட்சியில் தேயிலை உற்பத்தியாளர்களிடம் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்குமான தொழில்கள் உரிமம் (D&O Licence) தொடர்பாக மனுதாரர்

சமர்ப்பித்துள்ள 12.01.2018 நாளிட்ட தினத்தந்தியில் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பாக வால்பாறை நகராட்சியில் எவ்வித கோப்பினையும் நான் பார்க்கவில்லை. எனவே, மேற்கண்ட விளம்பரம் பிரசுரம் செய்தது தொடர்பான கோப்பு, 2017 ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், 2020 ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகியவை அடங்கிய புத்தகம், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் உரிமம் (D&O Licence) தொடர்பான கோப்பு, கணக்குப்பிரிவில் மேற்கண்ட விளம்பரம் தொடர்பாக அளிக்கப்பட்ட கட்டணம் தொடர்பான விவரம் ஆகியவற்றை இம்முறைமன்றத்தின் மறு விசாரணையில் நேரடியாக ஆஜராகி தினத்தந்தி பிரசுர நகல் மற்றும் கோப்பு, பிரசுரத்திற்குரிய கட்டண பட்டுவாடா தொடர்பான கோப்பு, D&O பொருள் குறித்த கோப்பு அனைத்தையும் சமர்பிக்கிறேன் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

5. இம்முறைமன்றத்தின் 16.12.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் வால்பாறை நகராட்சி ஆணையாளர் திரு. S. சுரேஷ்குமார் என்பவர் 29.12.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற மறு விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

''வால்பாறை நகராட்சியில் தேயிலை உற்பத்தியாளர்களிடம் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் உரிமம் (D&O Licence) தொடர்பான 13.01.2018 நாளிட்ட தினத்தந்தியில் வெளியிடப்பட்ட விளம்பரம் குறித்து வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் கோப்புகளோ அல்லது பதிவேடுகளோ ஏதும் பராமரிக்கப்படவில்லை. மேற்கண்ட காலகட்டத்தில் பணியாற்றிய நகராட்சி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வர் ஆகிய இருவரும் இறந்துவிட்டனர். ஆனால், அது தொடர்பான தீர்மானம் 29.12.2017 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், அதன் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேற்கண்ட வால்பாறை நகராட்சியில் (முன்னர் பேரூராட்சி) 1994 ஆம் ஆண்டில் மேற்கண்ட உரிமத்திற்கான கட்டணம் மாற்றப்பட்டது. அதன் பின்னர் சுமார் 23 ஆண்டுகளுக்குப் பின்னர் 2017 ல் மேற்கண்ட தொழில் உரிமத்திற்கான கட்டணம் மாற்றியமைக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. மேற்கண்ட அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் உரிமத்திற்கான (D&O Licence) கட்டணம் நகராட்சியின் தீர்மானத்தின்படி (தீர்மான எண்.141, நாள்.30.04.2020) 01.04.2020 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட தீர்மானத்தின் நகலினையும் இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் வால்பாறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. வால்பாறை நகராட்சியில் அச்ச மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழிகள் உரிமம் (D&O Licence) தொடர்பாக 1994 ஆம் ஆண்டில் மேற்கண்ட உரிமத்திற்கான கட்டணம் மாற்றப்பட்டு

அதன்பின்னர் பேரூராட்சியில் இருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சுமார் 23 ஆண்டுகளுக்கு பின்னர் கட்டணம் மாற்றியமைப்பதற்கான தீர்மானம் 29.12.2017 ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அதுகுறித்தான கோப்புகளோ, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெற மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்ட விளம்பரங்களோ, அது சம்பந்தமான கோப்புகளோ நகராட்சியில் எதுவும் பராமரிக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது. அதற்கு பின்னர், 30.4.2020ல் நகர்மன்ற தீர்மான எண்.141ல் 01.04.2020 முதல் அச்ச மற்றும் அருவருக்கத்தக்க தொழிலுக்கான (D&O) தொழில் உரிம கட்டணம் உயர்த்த தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அதனை நவம்பர் 27, 2020 அன்று கோயம்புத்தூர் மாவட்ட அரசிதழில் பொதுமக்கள் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை கேட்டறிய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது இதன் மூலம் அறியமுடிகிறது.

30.04.2020 ல் நகர்மன்ற தீர்மானம் இயற்றப்பட்டு நவம்பர் 27, 2020 மாவட்ட அரசிதழில் காலதாமதமாக வெளியிடப்பட்டது நகராட்சியின் நிர்வாக சீர்கேட்டை கண்கூடாக காணமுடிகிறது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 Sec 310 (2) ன் படி “Any by law or cancellation or Alteration of a by law when it shall have been duly confirmed shall be published in the district gazette and shall come into operation three months alter it has been so published என்ற விதிமுறையை மீறிய செயலாகவே இச்செயலை காணமுடிகிறது. மேலும் இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அரசிதழில் உள்ள கட்டணமானது பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில், இதுகுறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், வால்பாறை நகராட்சியில் அச்ச மற்றும் அருவருக்கத்தக்க தொழிலுக்கான கட்டணங்கள் குறித்தான கோப்புகள், கட்டணங்களை நிர்ணயம் செய்வதற்கு மன்றத்தால் இயற்றப்பட்ட துணை விதிகள் சம்பந்தமான கோப்புகள், எந்த அடிப்படையில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது, பொது மக்களிடமிருந்து ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் பெறப்பட்டுள்ளதா எனவும் உயர்த்தப்பட்ட கட்டணங்களுக்கான கேட்பு எழுப்பப்பட்டுள்ளதா எனவும், கட்டணங்கள் எவ்வளவு வசூல் செய்யப்பட்டது எனவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் குழுவினை அமைத்து, குழுவின் அறிக்கையை இரண்டு மாத காலத்திற்குள் பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் கடந்த 23 ஆண்டுகளாக அச்ச மற்றும் அருவருக்கத்தக்க (D&O) தொழிலுக்கான கட்டணங்களை மாற்றியமைக்காமல் வருவாய் இழப்பை ஏற்படுத்திய நகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Director of Municipal Administration is requested to bestow his personal attention on the issue and ensure that the Committee constituted for this purpose makes a thorough study and submit, its recommendations within the stipulated time of 2 months. It is a sad commentary on the status of Valparai Municipal office that records and files are not traceable, discontinuity of the office administration due to in-charge arrangements and the obvious neglect of this state by the supervisory officers like RDMA. The Director of Municipal Administration is advised to look into this unfortunate

crisis prevailing in the Valparai Municipal Commissioner office and restore normal and effective functioning of the office at least hereafter.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) செயலாளர்,
பிளாண்டர்ஸ் ஆசோசியேசன் ஆப் தமிழ்நாடு,
42, A.T.T. காலனி, கோயம்புத்தூர் – 641 018.

2) நகராட்சி ஆணையர்,
வால்பாறை நகராட்சி,
வால்பாறை.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

14/2/22

செயலாளர்.

14/02/22

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032